**VAIKO**
MEMBER OF PARLIAMENT
(RAJYA SABHA)
GENERAL SECRETARY - MDMK

सत्यमेव जयते

No.9, Sunehri Bagh Road,
New Delhi - 110011
Phone : 011-23011546
Mobile : 9443519568, 9444393903
E-mail : mpvaiko@sansad.nic.in

No.20, AL Block, 4th Street,
11th Main Road, Anna Nagar West,
Chennai - 600 040, Tamil Nadu
Phone : 044-26214252

31 ஆகஸ்ட் 2021

மின்துறை அமைச்சர்
அன்புச்சகோதரர் மாண்புமிகு **செந்தில் பாலாஜி** அவர்களுக்கு,

வணக்கம். நலம். தங்கள் நலமே விழைகின்றேன். கடந்த 10 ஆண்டுகளில், அண்ணா தி.மு.க. ஆட்சியில், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பல்வேறு முறைகேடுகளால், நிதி நிலைமை கடுமையாகப் பாதிக்கப்பட்டு, பெருந்தொகையான கடனில் சிக்கி இருக்கின்ற நிலைமை வேதனை அளிக்கின்றது. இந்தத் துறையின் அமைச்சராகத் தாங்கள் பொறுப்பு ஏற்றபிறகு ஆற்றி வருகின்ற பணிகள் நம்பிக்கை அளிக்கின்றன. தமிழ்நாடு மின்சார வாரியம் புத்துயிர் பெற வேண்டும்; மின்மிகை மாநிலமாகத் திகழ்ந்திட வேண்டும். அதற்கு அடிப்படையாகத் திகழ்கின்ற, மின்சார வாரியத்தின் ஊழியர்களுக்கு பணிப்பாதுகாப்பு, உரிய ஊதியம் கிடைத்திட வேண்டும்.

தமிழ்நாடு மின்வாரிய மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னேற்ற சங்கத் தோழர்கள், கீழ்காணும் கோரிக்கைகளை முன்வைத்து இருக்கின்றனர். தாங்கள் ஆய்வு செய்து, உரிய ஆணைகள் பிறப்பித்து உதவிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

1. கொரோனா பெருந்தொற்று உலகையே அச்சுறுத்திக் கொண்டு இருந்த காலத்திலும் கூட, தங்களது உயிரையும் பொருட்படுத்தாது, மின் வாரியப் பணியாளர்கள் 24 மணி நேரமும் கடமை ஆற்றினார்கள். அந்தக் காலகட்டத்தில், இறந்துபோன முன்களப் பணியாளர்கள் குடும்பங்களுக்கு ரூ 25 இலட்சம் இழப்பு ஈட்டுத் தொகை வழங்கியது போல, அதே காலகட்டத்தில் இறந்துபோன இறந்த மின்சார வாரியத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் இழப்பு ஈட்டுத் தொகை வழங்க வேண்டும்.

2) பேரிடர் காலங்களில் சாய்ந்து போன மின்கம்பங்களைத் தூக்கி நிறுத்தவும், அறுந்து போன மின் இணைப்புகளை வழங்கிடவும், களப்பணி ஆற்றிடப் போதுமான ஊழியர்கள் இல்லை. எனவே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ்நாடு மின்சார வாரியம், 'கேங்மேன் (Gangman)' என்ற புதிய பதவியை உருவாக்கி, அதற்கான விண்ணப்பங்களை வரவேற்றது.

90,000 தொழிலாளர்கள் விண்ணப்பித்தனர். அவர்களுள், 14,956 பேர், எழுத்துத்தேர்வு மற்றும் உடல்தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள். ஆனால், அந்தத் தேர்வை எதிர்த்து, பல தொழிற்சங்கங்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். எனவே, பணி ஆணை வழங்க முடியவில்லை.

அந்த வழக்கில், அவர்களைப் பணியில் சேர்க்கலாம் என, கடந்த 22.02.2021 அன்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. சட்டமன்றத் தேர்தலைக் கருத்தில் கொண்டு, அண்ணா தி.மு.க. அரசு, அன்று இரவே, ஏகப்பட்ட குழப்பங்களுடன், 9613 கேங்மேன் பணியாளர்களுக்கு பணியில் சேருவதற்கான ஆணைகளை வழங்கியது. அவர்களுள், இதுவரை 8500 பேர் பணியில் சேர்ந்து விட்டனர்.

Scanned by TapScanner

எழுத்துத் தேர்வு, உடல் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற மேலும் 5336 பேருக்கு, இன்னமும் பணியில் சேருவதற்கான ஆணை வழங்கவில்லை. அவர்களில் பலர் அரசு வேலையை பெறுவதற்கான வயது வரம்பின் விளிம்பில் நம்பிக்கையோடு காத்திருக்கின்றனர். திருமணம் உறுதி செய்யப்பட்டு இருந்த பலரது திருமணங்கள் நின்றுவிட்டன. எனவே, அந்த 5336 தொழிலாளர்களுக்கும் பணியில் சேருவதற்கான ஆணைகளை வழங்கிட வேண்டும்.

3)புதிதாக பணியில் சேர்ந்த கேங்மென் தொழிலாளர்களுக்கு, ரூ.15000 மாத ஊதியமாக வரையறுக்கப்பட்டுள்ளது. அதில் பிடித்தம் போக மீதியைத்தான் ஊதியமாகப் பெறுகின்றார்கள். அவர்களை, சொந்த மாவட்டங்களில் நியமிக்காமல் 300முதல் 400 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மாவட்டங்களில் நியமித்தனர். அங்கே அவர்களுக்கான, தங்கும் இடம், உணவு மற்றும் போக்குவரத்திற்கே அவர்களுடைய மாத ஊதியத்தின் பெரும்தொகை செலவு ஆகி விடுகின்றது. மீதி உள்ள சொற்பத் தொகையில், குடும்பம் நடத்த இயலாது.

பயிற்சி அனுபவம் இல்லாத புதிய இடங்களில் பணி செய்ய வற்புறுத்தியதன் விளைவாக, கடந்த ஆறு மாதங்களில், ஆறு கேங்மேன் தொழிலாளர்கள் மின்சாரம் தாக்கி இறந்து விட்டனர். இதனால், சக தொழிலாளர்கள் அச்சம் அடைந்துள்ளனர்; பாதுகாப்பு குறித்த கேள்வி எழுந்து உள்ளது. கால வரையறை இல்லாமல் பணி செய்கின்ற கேங்மென் தொழிலாளர்களுக்கு, வாய்ப்பு உள்ள இடங்களில் கூட, மின்சார வாரியம் தங்கும் இட வசதி செய்து தரவில்லை. விடுமுறை வழங்குவது இல்லை. இதனால், பொறுப்புடன் கடமை ஆற்றும் தொழிலாளர்கள், மிகுந்த மன அழுத்தம் அடைந்து உள்ளனர். அவர்கள் ஏற்கனவே பணி அனுபவம் பெற்ற இடங்களில் பாதுகாப்புடன் பணியாற்றுவதன் மூலம் சிறப்பாகப் பணி ஆற்றுவார்கள்; தேவை அற்ற உயிர் இழப்பைத் தடுக்க முடியும்.

எனவே, கேங்மேன் பணியாளர்களை அவர்களது சொந்த மாவட்டங்களிலேயே பணியில் அமர்த்திட வேண்டும்; அவர்கள் விருப்பத்தின் அடிப்படையில் பணி இட மாற்றம் வழங்கிட வேண்டும்; மின்வாரியப் பணியாளர்களுக்கு உரிய விடுப்பு மற்றும் சலுகைகள் அனைத்தும் வழங்க வேண்டும். வாய்ப்புள்ள இடங்களில் வாரியக் குடியிருப்புகள் வழங்க வேண்டும்; கேங்மேன் பணியாளர்கள் அனைவருக்கும் பணி நேரம் வரையறை செய்திட வேண்டும்; அடிப்படை உதவியாளர்களுக்கு உரிய அடிப்படை ஊதியத்தில் அவர்களைப் பொருத்தம் செய்ய வேண்டும்.

4) தூத்துக்குடி, மேட்டூர், வடசென்னை அனல்மின் நிலையங்களில், மின்வாரியப் பணியாளர்களுக்கு நிகராக, உயிருக்கு ஆபத்தான பணிகளில் 4000 க்கும் கூடுதலான ஒப்பந்தத் தொழிலாளர்கள் நீண்டகாலமாகப் பணி ஆற்றி வருகின்றார்கள். அவர்களுக்கு இ.பி.எப் மற்றும் இ.எஸ்.ஐ முறையாக செலுத்தப்பட்டு, அதற்கான தொகையை வாரியம் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கி வருகின்றது. எனவே, அவர்களையும் பணி நிரந்தரம் செய்திட வேண்டும்.

அதற்கு முதல் கட்டமாக, அவர்களை, கூட்டுறவுத் தொழிலாளர்களாக அறிவித்திட வேண்டும். மின்வாரிய நடைமுறைகளின்படி, ஒப்பந்த தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஒருநாள் ஊதியம் ரூ.412 ஆக உறுதி செய்ய வேண்டும். நன்றி.

தங்கள் அன்புள்ள,

வைகோ

(வைகோ)

மாண்புமிகு செந்தில் பாலாஜி அவர்கள்,
மின்துறை அமைச்சர்
தமிழ்நாடு அரசு, புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை.

Scanned by TapScanner